Student/Registration Number | | | | | | | | | | | Centre Number | | | | | | |

## 2007 Public Examination

# Tamil

## Continuers Level

**Thursday 18 October: 2 p.m. Eastern Standard Time**

Reading Time: 10 minutes
Working Time: 2 hours and 50 minutes

- *You have 10 minutes to read all the papers and to familiarise yourself with the requirements of the questions. You must not write during this time.*
- *Monolingual and/or bilingual printed dictionaries may be consulted during the reading time and also during the examination.*

## Section 1: Listening and Responding (30 marks)

**Instructions to Students**

1. Allow approximately 50 minutes for Section 1.
2. Write all your answers to the questions in Section 1 in this booklet in blue or black ink or ball-point pen. Space is provided for you to make notes.
3. You must answer ALL questions in Part A and Part B.
4. Answer Part A in ENGLISH and Part B in TAMIL.
5. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
6. All question booklets will be collected at the end of the examination.

*This examination is used for the HSC (New South Wales), the NTCE (Northern Territory), the SACE (South Australia), the TCE (Tasmania), the VCE (Victoria), and the WACE (Western Australia).*

© Victorian Curriculum and Assessment Authority 2007

**Part A** (Questions 1–3)
(20 marks)

*When judging performance in this part, the examiner(s) will take into account the extent to which the student demonstrates the capacity to:*

- *understand general and specific aspects of texts by identifying and analysing information and convey the information accurately and appropriately.*

You will hear THREE texts. Each text will be played twice. There will be a short break between the first and second playings in which you may make notes.

Listen carefully to each text and then answer the questions in ENGLISH.

**Marks** | You may make notes in this space.

**Text 1**

1. (a) What evidence is there of the strong bonds between these two speakers? **4**

- ______________________________
- ______________________________
- ______________________________
- ______________________________

(b) Explain why the grandfather could not come until just before the party. **1**

______________________________

(c) Why is there such a large crowd at this special party? **2**

______________________________

(d) If the grandfather's wishes are granted, what will Nilani do in the following year? **1**

______________________________

Marks | You may make notes in this space.

**Text 2**

2. What are the features of this new restaurant which may appeal to members of the Tamil community in Australia?

   Complete the following.

   **Type of cuisine** **1**

   - ________________________________________

     ________________________________________

   **Method of cooking and serving** **2**

   - ________________________________________
   - ________________________________________

   **Choice of dishes** **4**

   - ________________________________________
   - ________________________________________
   - ________________________________________
   - ________________________________________

Marks | You may make notes in this space.

**Text 3**

3\. (a) At what event is this announcement made? **1**

______________________________

______________________________

(b) How can parents participate in today's activities? **3**

- ______________________________
- ______________________________
- ______________________________

(c) Name one event that took place before the interval. **1**

______________________________

**Part B** (Questions 4–5)
(10 marks)

---

*When judging performance in this part, the examiner(s) will take into account the extent to which the student demonstrates the capacity to:*

- *understand general and specific aspects of texts by identifying and analysing information;*
- *convey the information accurately and appropriately.*

---

You will hear TWO texts, one relating to Question 4 and one relating to Question 5. Each text will be played twice. There will be a short break between the first and second playings in which you may make notes.

Listen carefully to each text and then answer the questions in TAMIL.

**Marks**

You may make notes in this space.

**Text 4**

4. Explain why Shankar's mum has many reasons to be happy today. **4**

சங்கரின் தாயார் இன்று மகிழ்ச்சியாக இருப்பதற்குரிய காரணங்கள் பலவற்றை விளக்குக.

Marks | You may make notes in this space.

**Text 5**

5. (a) Explain why the doctor wishes to appoint Mary to work in his practice. **3**

வைத்தியர், மேரியை இந்த நிலையத்தில் வேலைக்கு நியமிப்பதற்கு ஏன் விரும்புகிறார் என்பதை விளக்குக.

(b) Why is the doctor temporarily in a difficult position? **3**

ஏன் வைத்தியர் தற்காலிகமான கஷ்ட நிலையில் இருக்கிறார்?

**End of Section 1**

| Student/Registration Number | | | | | | | | | | | | Centre Number | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | |

**2007 Public Examination**

# Tamil
## Continuers Level

### Section 2: Reading and Responding (30 marks)

**Instructions to Students**

1. Allow approximately 1 hour and 15 minutes for Section 2.
2. Write all your answers to the questions in Section 2 in this booklet in blue or black ink or ball-point pen.
3. You must answer ALL questions in Part A and Part B.
4. Answer Part A in ENGLISH and Part B in TAMIL.
5. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
6. All question booklets will be collected at the end of the examination.

*This examination is used for the HSC (New South Wales), the NTCE (Northern Territory), the SACE (South Australia), the TCE (Tasmania), the VCE (Victoria), and the WACE (Western Australia).*

*© Victorian Curriculum and Assessment Authority 2007*

**Part A** (Questions 6–7)
(20 marks)

---

*When judging performance in this part, the examiner(s) will take into account the extent to which the student demonstrates the capacity to:*

- *understand general and/or specific aspects of texts, by, for example, comparing, contrasting, summarising, or evaluating, and convey the information accurately and appropriately.*

---

6. Read the text and then answer in ENGLISH the questions that follow.

## பிரச்சார முயற்சிகளால் ஏற்படும் விளைவுகள்

பிரச்சாரக் கலாச்சாரம் அல்லது பரப்புரைக் கலாச்சாரம் (campaign culture) நமது நாட்டில் தவிர்க்கவியலாத ஒன்றாக மாறிவிட்டது. புகைப்பிடிப்பதற்கு எதிராகப் பரப்புரை, வாசிப்பை ஊக்குவிப்பதற்கான பரப்புரை, தாய்ப்பால் ஊட்டுவதற்குப் பரப்புரை என நாடு முழுவதும் பரப்புரைப் பணிகள் பல்கிப் பெருகி வருகின்றன.

பிரச்சாரப் பணிகள் செய்வது எளிமையான ஒன்றல்ல. திட்டமிடல் தொடங்கி அதற்காக மிக அதிகமான பணம் செலவிடப்படுகிறது. மக்களின் உழைப்புப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், இந்தப் பரப்புரைப் பணிகள் எதிர்பார்த்த அளவிற்கு வெற்றி அளிக்கின்றனவா என்றால் அது கேள்விக்குறியே! பல பரப்புரைப் பணிகள் தொடங்கிய நோக்கத்தைச் சென்றடையாமல் பாதியிலேயே நிறுத்தப்படுகின்றன. இதனால் பணமும் நேரமும் வீணாகச் செலவாகின்றன.

அண்மையில் அரசாங்கம் பள்ளி மாணவர்களின் கட்டொழுங்குச் (discipline) சிக்கல்களுக்குத் தீர்வு காண 16 மில்லியன் ரூபாய் ஒதுக்கியுள்ளதாக அறிவித்துள்ளது. இந்த ஒதுக்கீடானது பள்ளிகளின் ஒழுங்கீனச் செயல்களைக் குறைப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்குக் கலந்துரையாடுதல் நடத்துதல், பாடசாலை வரவுக்குறைவுக்கு எதிராகத் திட்டங்களைச் செயற்படுத்துதல், நகர மற்றும் கிராமப்புற மாணவர்களின் நடவடிக்கைகளை ஆய்வு செய்வதற்கு நிதி உதவி அளித்தல், மாணவர் சமுதாயச் சிக்கல்கள் தொடர்பான கண்காட்சி, மின்னியல் தொடர்பு சாதனங்களின் மூலம் பரப்புரை என இந்த ஒதுக்கீடு பயன்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்காகப் பல்வேறு வகையான கைநூல்களும் வெளியிடப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது.

இங்குதான் நாம் ஒன்றைச் சிந்திக்க வேண்டியது மிகவும் அவசியமாகிறது. இதுவரை செயற்படுத்தப்பட்ட எத்தனை பரப்புரைப் பணிகள் வெற்றி பெற்றுள்ளன? இளையோர் புகைப்பிடிப்பதற்கு எதிரான பரப்புரைத் திட்டம் இன்று எந்த நிலையில் உள்ளது? இளம் வயதினர் புகைப்பிடிப்பது நின்று விட்டதா? அல்லது கடைக்காரர்கள் அவர்களுக்குச் சிகரெட் விற்பதை நிறுத்தி விட்டனரா?

இங்கு பரப்புரைக் கலாச்சாரம் பல வேளைகளில் பயனளிப்பதில்லை என்ற கருத்தை நாம் உணர வேண்டும். பரப்புரைக் கலாச்சாரத்தைச் சிறந்ததொரு தீர்வாகக் கருதாமல் பலதரப்பட்ட முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும்.

சிலருக்கு இந்தப் பரப்புரைப் பணிகள் வருமானத்தைத் தேடித் தரும் ஒரு தொழிலாகவும் ஆகிவிடுகின்றன. பரப்புரைப் பணிகளுக்கான விளம்பரங்களைச் செய்தல்; கைநூல்கள், பதாகைகள் தயாரித்தல்; எனப் பலர் இதனால் இலாபம் அடைகின்றனர். ஆனால் அவற்றைப் பெற்றுக் கொள்ளும் நாம் முழுமையான நன்மையை அடைகிறோமா? எனவே, பரப்புரைப் பணிகள் தொடங்கப்பெற்ற நோக்கத்தை அடைந்து வெற்றி பெற, முறையான திட்டமிடல்கள் தேவை. தோல்வியில் முடியும் என்று கருதப்படும் பரப்புரைகளைத் தொடங்காமலேயே விட்டுவிட வேண்டும்.

QUESTIONS

**Marks**

(a) What would you say are the social problems affecting this country as described in the pamphlet? **4**

- ____________________
- ____________________
- ____________________
- ____________________

(b) How does the author view promotional campaigns? What are his reasons for holding this view? **5**

____________________

____________________

____________________

____________________

____________________

____________________

____________________

____________________

7. Read the text and then answer in ENGLISH the questions that follow.

## படைப்பாற்றல்

படைப்பாற்றல் (creativity) மனித சமுதாயத்துக்கு மட்டும் உரிய தனித்துவமான பண்புகளில் ஒன்றாகும். இந்த ஆற்றலே புதிய கண்டுபிடிப்புக்களுக்கு அடிப்படையானதாகும். படைப்பாற்றல் மனிதருக்குப் பிறவியிலேயே வருகிறது என்று எமது முன்னோர் கருதி வந்தனர். இப்போது இந்த ஆற்றல் கற்றல் கற்பித்தல் மூலம் பெறப்படக் கூடியது என்று கூறப்படுகிறது. சிந்திக்கும் திறனே படைப்பாற்றலை அதிகரிக்கிறது. சிந்திக்கும் திறன் பெருகுவதற்குக் காரணமானது என்று கருதப்படுகின்ற புத்திக்கூர்மை (intelligence) இயற்கையாகப் பிறவியிலேயே வருவதாக இருக்கலாம். ஆனால் சிந்திக்கும் திறனானது கற்றல், அனுபவம் பெறுதல் மூலம் விருத்தி செய்யப்படவேண்டியது. எடுத்துக்காட்டாக, புத்திக்கூர்மை, ஆற்றல் மிக்க புறப்படாத மோட்டார் வண்டி போன்றது. சிந்தனைத்திறன் வண்டி ஓட்டுபவரின் திறமை போன்றது. ஓட்டுனரின் ஆற்றலானது பயிற்சி, அனுபவம் காரணமாக மேம்பாடடையக் கூடியது. அதுபோலவே சிந்தனைத்திறனைப் பயிற்சியால் வளர்க்க வேண்டும்.

நீண்டகாலமாகச் சிந்தனைத் திறன் வளரவேண்டும் என்பதற்காக விவாதம், தர்க்கம் முதலியனவற்றை மக்கள் பயன்படுத்தி வந்தனர். இவை மற்றவர்களுடைய கருத்துக்களைத் தாக்கும் பண்பையும், தனதுகருத்தைத் தலையில் தூக்கிவைத்துப் போற்றிக்காக்கும் பண்பையும் வளர்க்குமே அன்றி, சிந்தனைத் திறனை வளர்க்க உதவாதவை. இன்று நிபுணர்கள் பலர், பல ஆராய்ச்சிகளின் பின்னர் பிரச்சனைகளைத் தீர்க்கவும் புதியனவற்றைப் படைக்கவும் குழுவாகச் சேர்ந்து சிந்திக்கும் முறையே சிறந்த முறை என்று கண்டுபிடித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்கள். உண்மையிலேயே இது ஒரு புதிய முறையா?

இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னரே சோழமன்னன் கரிகாலன் இந்தியாவின் காவிரி நதிக்குக் குறுக்கே 10மைல் நீளத்திற்கு அணை ஒன்றைக் கட்டுவித்தான். இந்த அணை குழுவாகச் சிந்தித்தமைக்குச் சிறந்த உதாரணமாகக் கூறப்படுகிறது. ஒருபோதும் வற்றாது தொடர்ந்து பாய்ந்தோடிக்கொண்டு இருந்த ஆற்றின் மணல் படுக்கை அது. நீர் இறைக்கவோ பாரம் தூக்கவோ வேறு எந்த வேலையையாவது இலகுவாக்கவோ கருவிகள், இயந்திரங்கள் எதுவுமே இல்லாத காலம். அப்படியான காலத்தில் உருவான தொழில்நுட்ப விந்தை அது. கரிகாலன் தனது மந்திரிமாரையும், நாட்டிலிருந்த கல்விமான்களையும் அனுபவம்மிக்க நிலப்பிரபுக்களையும் கருத்தரங்கு ஒன்றுக்கு அழைத்தான். "நான் அணையைக் கட்டுவதற்கும் அதனை நீண்டகாலம் பராமரிப்பதற்குமான உங்கள் ஆலோசனைகளை எதிர்பார்க்கிறேன்" என்று கேட்டான். அந்த ஆலோசனைகளின்படி ஆற்றை மறித்துக் கருங்கல்லால் மிகப்பெரிய அணையைக் கட்டுவித்தான் கரிகாலன். அந்த அணைக்கட்டு இன்றும் சிறிதும் சேதமின்றி நிலைத்து நிற்கிறது.

QUESTIONS

**Marks**

(a) Explain the simile in this article. **2**

(b) Label the mind map boxes correctly using relevant nouns. **2**

| Intelligence | → | Thinking skills | → | | → | |
|---|---|---|---|---|---|---|

(c) How does the story in the third paragraph illustrate the ideas expressed in the first and the second paragraphs? **2**

(d) Why was it difficult to build the dam across the River Kaveri? **3**

- 
- 
- 

(e) What device does the author use to link the last two paragraphs? How effective is this device? **2**

**Part B** (Question 8)
(10 marks)

---

*When judging performance in this part, the examiner(s) will take into account the extent to which the student demonstrates the capacity to:*

- *understand general and specific aspects of a text by identifying, analysing, and responding to information;*
- *convey information coherently (structure, sequence, accuracy and variety of vocabulary and sentence structure) and appropriately (relevance, use of conventions of the text type).*

---

8. Read the text and then answer the question in 150–200 words in TAMIL on page 7.

முல்லைத்தீவு
இலங்கை
**15–08–07**

அன்புள்ள பேனாநண்பனுக்கு,

உனது கடிதம் கிடைத்தது. எனது பாடசாலை வாழ்வுபற்றிய விபரங்களை எழுதும்படி கேட்டிருந்தீர். நான் இப்பாடசாலையில் ஆரம்பக்கல்வி முதல் படித்து வருகிறேன். எனக்கு இக்கிராமத்து மாணவர்கள் மாத்திரமல்லாது அயற்கிராமத்து மாணவர்களும் பாடசாலை நண்பர்களாக இருக்கிறார்கள். வெள்ளிக்கிழமைகளில் அவர்களது துவிச்சக்கரவண்டிகளில் ஏறி அவர்களது வீடுகளுக்குச் செல்வது எனக்கு விருப்பமான பொழுதுபோக்காகும். எமது பாடசாலை **1500** மாணவர்களையும் **55** ஆசிரியர்களையும் கொண்டுள்ளது. நான் **11**ஆம் ஆண்டில் படித்தாலும் காலையில் தோட்டவேலையில் எனது அப்பாவுக்கு உதவிய பின்னரே பாடசாலைக்குச் செல்வேன்.

எனது வகுப்பில் **40** மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். நான் இவ்வாண்டு இறுதியில் **11**ஆம் ஆண்டு அரசாங்கப் பொதுப் பரீட்சையில் எட்டுப்பாடங்களில் மூன்று திறமைச் சித்திகளுடன் குறைந்தது ஆறு பாடங்களில் சித்திபெற்றால், பல்கலைக்கழகத்துக்குச் செல்வதற்கான வகுப்புக்கு அனுமதி பெறுவேன். அதில் இரண்டு வருடம் படித்த பின்னர் நடைபெறும் அரசாங்கப் பரீட்சையில் அதிகூடிய புள்ளி பெற்றால் அதற்கேற்றபடி பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்படுவேன்.

நான் பாடசாலைக்குச் சிறிது பிந்திச்சென்றால் இரண்டு பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டிவரும். ஒன்று ஆசிரியர் தண்டனைக்கு ஆளாகவேண்டும். அடுத்தது நான் இருப்பதற்கு அன்று பாடசாலைக்கு வராத மாணவர்களின் கதிரைக்காக ஏனைய வகுப்புக்களுக்கு அலையவேண்டும்.

நான் பாடசாலையில் கல்வி கற்பதற்காக அதிகம் செலவு செய்ய வேண்டியதில்லை. அரசாங்கம் பாடப்புத்தகங்களையும் சீருடைகளையும் இலவசமாகத் தருகிறது.

கணித வீட்டுவேலையை நினைக்கப் பயமாக இருக்கிறது. செய்து முடிக்காவிட்டால் ஆசிரியரின் தண்டனை கிடைக்கும். எனவே இத்துடன் நிறுத்துகிறேன். உமது கடிதத்தை எதிர்பார்க்கிறேன்.

அன்பு நண்பன்
இளங்கோவன்

QUESTION

You are an Australian high school student. You have received the above letter from your pen friend. Using the information provided, write the text of an evaluative speech to present at your school assembly on life in and outside your school and the school described in the letter.

நீர் ஓர் அவுஸ்ரேலிய உயர்வகுப்பு மாணவர். உமது பேனாநண்பர் எழுதிய இக் கடிதத்தைப் பெற்றுள்ளீர். இதில் தரப்பட்ட தகவல்களைக் கொண்டு உமது பாடசாலையிலும் மேலே குறிப்பிடப்பெற்ற பாடசாலையிலும் காணப்படும் உள்ளேயும் வெளியேயுமான வாழ்க்கை முறைகளை மதிப்பீடு செய்து உமது பாடசாலை ஒன்றுகூடலில் ஆற்றவிருக்கும் பேச்சுக்கான உரையை எழுதுக.

*Do not remove this page from the question booklet.*

| | |
|---|---|
| Student/Registration Number | |
| Centre Number | |

Tamil
Continuers Level

Question 8



PLEASE TURN OVER

**End of Section 2**

Student/Registration Number | | | | | | | | | | | Centre Number | | | | | | |

## 2007 Public Examination

# Tamil

## Continuers Level

### Section 3: Writing in Tamil (15 marks)

**Instructions to Students**

1. Allow approximately 45 minutes for Section 3.
2. Write your answer to a question from Section 3 in this booklet in blue or black ink or ball-point pen. Space is provided for you to make notes.
3. You must answer ONE question in TAMIL.
4. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
5. All question booklets will be collected at the end of the examination.

*This examination is used for the HSC (New South Wales), the NTCE (Northern Territory), the SACE (South Australia), the TCE (Tasmania), the VCE (Victoria), and the WACE (Western Australia).*

*© Victorian Curriculum and Assessment Authority 2007*

**Section 3** (Questions 9–12)
(15 marks)

---

*When judging performance in this section, the examiner(s) will take into account the extent to which the student demonstrates:*

- *relevance and depth of treatment of ideas, information, or opinions;*
- *accuracy and range of vocabulary and sentence structures;*
- *the capacity to structure and sequence response and capacity to use conventions of the text type.*

---

Answer ONE question from this section in 200–250 words in TAMIL.

9. You are going to apply for a position as a newsreader with a Tamil television company in Australia. Write a personal profile giving details about yourself and your abilities, your reasons for applying, and what you can contribute to the company.

   அவுஸ்ரேலியாவில் உள்ள தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றின் செய்தி வாசிப்பாளர் பதவிக்கு விண்ணப்பிக்க இருக்கிறீர். உம்மைப்பற்றியும் விண்ணப்பிப்பதற்கான காரணங்கள் பற்றியும் உமது திறமைகள் பற்றியும் அந்த நிறுவனத்திற்கு நீர் எவ்வாறு பங்களிப்பீர் என்பது பற்றியும் தெரிவித்து உமது சொந்த விபரங்களை எழுதுக.

10. Write an informative report for a Tamil newspaper explaining the actions Australia has been taking to reduce road accidents.

    வீதி விபத்துக்களைக் குறைப்பதற்கு அவுஸ்ரேலியா எடுத்துவரும் நடவடிக்கைகளை விளக்கும் தகவல்களைத் தந்து தமிழ்ப் பத்திரிகை ஒன்றுக்குக் கட்டுரை எழுதுக.

11. Write an imaginative story about a student who has discovered a magic word; when the word is spelled the student knows what the person next to him/her is thinking.

    உச்சரித்தால், அருகில் உள்ளவர் என்ன நினைக்கிறார் என்று அறியக்கூடிய மந்திரச் சொல் ஒன்று மாணவர் ஒருவருக்குத் தெரியவந்தது. அச்சொல்லை அவர் உச்சரித்த பின்னர் நடைபெறுவனவற்றைக் கற்பனைக்கதையாக எழுதுக.

12. You have witnessed a huge waste of water. Write an article for your local newspaper persuading the community to take steps to conserve water.

    தண்ணீர் அதிகம் வீணாக்கப்படுவதை நீர் நேரில் கண்டுள்ளீர். நீரைச்சேமிக்க எடுக்கவேண்டிய வழிமுறைகளை எடுப்பதற்குச் சமூகத்தைத் தூண்டக்கூடியவாறு உள்ளூர்ப் பத்திரிகை ஒன்றுக்குக் கட்டுரை ஒன்றை எழுதுக.

You may make notes in this space.

Question Number:

**End of Section 3**